**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

U/s 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~ (1)

~~(கு.வி.மு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8082867

1. District : அரியலூர் / மாவட்டம் | PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு / காவல்நிலையம் | Year: 2024 / ஆண்டு | FIR No.: 3/24 / மு.த.அ. எண் | Date: 21.08.24 / நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்: U/s 7

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 20.08.24 | Date from : நாள் முதல் 16.45 | Date to : நாள் வரை 23.30

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.08.24 | Time : நேரம் 12.30

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.08.24 | Time : நேரம் 12.30

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலம் (கண்காணிப்பு அறிக்கை)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி திருமானூர் வேளாண் விரிவாக்க மையம் கீழப்பழுவூர் சுமார் 15 Km தெற்கு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் H. ரவிசேகரன் | (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் H. பட்டாபிராமன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49/24 | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) K. ராஜேந்திரன் த/பெ கண்ணையன், வேளாண் அலுவலர் (பொறுப்பு) வேளாண் உதவி இயக்குநர், திருமானூர் வட்டம், அரியலூர் மாவட்டம் (2) ரா. தனமணி ஓய்வுபெற்ற தொழில்நுட்ப வேளாண்மை, (3) T. செல்வகுமார் TA/Depot Manager (4) M. கோவிந்தராஜ் TA/Depot Manager,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   NIL

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

21.08.2024
P-GUNASEKARAN
Dy. I. C.O.
Trichy

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.08.24 at 13.30 hrs

Name: பெயர் B. Kavitha
Rank: நிலை ……… No. எண் ………
VHAC,
21.08.24

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2024 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

இன்று 21.08.2024-ம்தேதி பகல் 12.30 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் பா.கவிதா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.ப.குணசேகரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் என்முன்பாக ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் ப.குணசேகரன், வயது-49/2024, த/பெ. பட்டாபிராமன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அம்மா, பொருள்: அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம் கீழப்பழூர் to திருச்சி சாலையிலிருந்து மலத்தான் குளம் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் செயல்பட்டு வரும் திருமானூர் மண்டல வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனை மையத்தினை 20.08.2024-ம்தேதி அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கை வேண்டி புகார் அளித்தல் தொடர்பாக... பார்வை: 1.திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் கடித எண். A1/175/2024, நாள்: 20.08.2024. 2.திடீர் சோதனை செயல்முறைகள். நாள் 20.08.2024. நான், திருச்சிராப்பள்ளி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் வேளாண் விரிவாக்க மையத்தில் செயல்பட்டு வரும் வேளாண் இடுபொருள் விற்பனை மையத்தில் திருமானூர் மண்டல வேளாண் உதவி இயக்குநர் செல்வி.எழில்ராணி அவர்கள் புதிய விற்பனையாளர்களை அமர்த்தி மானியத்தின் அடிப்படையில் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய விதைகள் மற்றும் இடுபொருட்களுக்கு விவசாயிகளிடமிருந்து 10 கிலோ மக்காச்சோள விதை மற்றும் இடுபொருட்கள் ரூ.1,600/- வீதம் பணமாக பெற்றுக்கொண்டு ரசீது ஏதும் வழங்காமல் அத்தொகையினை கையாடல் செய்து வருவதாக 20.08.2024-ம்தேதி அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் மூலம் கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களன் உத்தரவுப்படி நான் அரியலூர் ஊ.த.க.பிரிவு அலுவலகம் வந்து, அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து, காவல் ஆய்வாளர் திருமதி.பா.கவிதா மற்றும் விஜிரென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம் கீழப்பழூர் to திருச்சி சாலையிலிருந்து மலத்தான் குளம் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்திற்கு சென்று அங்குள்ள திருமானூர் மண்டல வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனை மையத்தில் பணியில் இருந்த அலுவலர்கள் மற்றும் ஆஜரில் இருந்த தனிநபர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ்

குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு 20.08.2024-ம்தேதி மாலை சுமார் 16.45 மணி முதல் 23.30 மணி வரை அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.பா.கவிதா மற்றும் விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,60,430/-க்கு உரிய அலுவலர்கள் சரியான கணக்கு கூறாத காரணத்தினால் அப்பணம் சட்ட விரோதமாக ஆதாயம் அடையும் நோக்கத்தில், அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியும், பொதுமக்களை ஏமாற்றியும், சுயலாபத்துடன் முறைகேடாக பெற்று கையாடல் செய்த பணமாகவோ, யாரிடமிருந்தாவது கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணமாகவோ, யாருக்கேனும் லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டு, அது தொடர்பாக அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி செயல்முறைகள் பின்வறுமாறு.

சம்பவ இடமான ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையமானது அரியலூர் மாவட்டம் அரியலூர் வட்டம், கீழப்பழூர் to திருச்சி செல்லும் சாலையிலிருந்து மலத்தான்குளம் செல்லும் தெற்கு வடக்கான சாலையின் கிழக்கு புறத்தில் அமைந்துள்ளது. மேற்படி வளாகத்தில் 1.உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக கட்டிடம், 2.வேளாண் இடுபொருள் விற்பனை நிலைய கட்டிடம் (Depot) மற்றும் 3.பிரதான அலுவலக கட்டிடம் ஆகிய கட்டிடங்கள் அமைந்துள்ளன.

உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக கட்டிடமானது சுமார் 20X30 அளவில் தெற்கு பார்த்த வாயிலுடன் அமைந்துள்ளது. அதன் தெற்குபுறம் சுமார் 30X30 அளவில் வேளாண் இடுபொருள் விற்பனை மையமும், சுமார் 30X30 அளவில் தோட்டக்கலைத்துறை இடுபொருள் விற்பனை மையமும் மேற்கு பார்த்த வாயில்களுடன் அமைந்துள்ளது. அதனைத்தொடர்ந்து பிரதான அலுவலக கட்டிடமானது சுமார் 95X30 அளவில் மேற்கு பார்த்த வாயிலுடன் அமைந்துள்ளது. பிரதான அலுவலக கட்டிடத்தின் முன்புற வாயிலைத் தொடர்ந்து சுமார் 15X15 அடி அளவில் காத்திருப்போர் கூடமும், அதனைத்தொடர்ந்து தெற்கு வடக்காக செல்லும் நடைபாதையும் அமைந்துள்ளது. நடைபாதையின் மேற்குபகுதியல் 15X15 அளவிலாள இடத்தில் முதல் தளத்திற்கு செல்லும் படிகட்டுகள், 10X15 அடி அளவில் கனிணி அறை, காத்திருப்போர் கூடம், சுமார் 35X15 அளவில் வேளாண்துறை அலுவலகம், சுமார் 20X15 அளவில் தோட்டக்கலைத்துறை அலுவலகம் ஆகியவை தெற்கிலிருந்து வடக்காக அமைந்துள்ளது. நடைபாதையின் மேற்குபகுதியில் தனித்தனியே அமைந்த 3 பொது கழிவறைகள், சுமார் 10X15 அளவில் பதிவேடுகள் அறை, சுமார் 10X15 அளவில் AO அறை, சுமார் 25X15 அளவில் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம், 10X15 அளவில் நடைபாதை மற்றும் சுமார் 20X15 அளவில் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் ஆகியவை அமைந்துள்ளது.

முதல் தளத்தில் 10X15 அளவில் மூன்று அறைகளும், 30X15 அளவில் கூட்ட அறங்கமும், இரண்டு பொது கழிவறைகளும் அமைந்துள்ளது. இந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் CCTV கேமிரா ஏதும் பொருத்தப்படவில்லை. இவ்வாறாக கீழப்பழூர் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் அமைந்துள்ளது.

திடீர் ஆய்வுக்குழுவினர் கீழப்பழூர் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்திற்குள் வந்தபோது, 1.செல்வி.எழில்ராணி, திருமானூர் மண்டல வேளாண் உதவி இயக்குநர், 2.திருமதி.கலைமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர், 3.திரு.இளையகுமார், JA/Depo Manager(பிணையம்), ஏலாக்குறிச்சி, 4.திரு.கோவிந்தசாமி, JA/Depo Manager(பிணையம்), 5.திருமதி.சிவரஞ்சனி, AAO, 6.திரு.அருண்ராஜ், JA, 7.திருமதி.கவிதா, AHO, 8.திரு.ராஜா, ஓட்டுநர், 9.திரு.சுந்தரமூர்த்தி, Assistant Technology Manager, 10.திரு.விஜய், Bio Control Labour, 11.திரு.கொளஞ்சி, DAO, 12.திரு.தமிழ்குமார், Bio Control Labour, 13.திருமதி.விஜயசாந்தி, தினக்கூலி, 14.திருமதி.சாரதா, தினக்கூலி, 15.திருமதி.மணிமேகலை, தினக்கூலி, 16.திருமதி.புனிதவள்ளி, தினக்கூலி ஆகியோர்களும், தனியார் நபர்களான 1.திரு.சாமிக்கண்ணு, 2.திரு.ஆசைத்தம்பி, 3.திரு.நல்லுசாமி, 4.திரு.தேவமணி, 5.திரு.அண்ணாதுரை, 6.திரு.அஜித்குமார், 7.திரு.ராஜேந்திரன் ஆகியோர்களும் மேற்படி அலுவலகத்தில் இருந்தனர். மேற்படி அலுவலகத்தில் இருந்த அனைவரிடமும் திடீர் சோதனை செய்ய வந்த நோக்கத்தை தெரிவித்து, அவர்களை விஜிலென்ஸ் குழுவினருடன் தனித்தனியாக விசாரித்து, சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அலுவலகத்தில் இருந்த வேளாண் உதவி இயக்குநர் செல்வி.எழில்ராணி அவர்களை துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் விசாரணை செய்தபோது அவரது கைப்பையிலிருந்து ரூ.1,050/-ஐ ஆஜர் செய்தார். தான் வைத்திருந்த ரூ.1050/- தனது கைச்செலவிற்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால், அந்தப்பணம் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. மேலும், அவரிடம் வேறு ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என்று கேட்டதற்கு 17.08.2024 மற்றும் 19.08.2024 ஆகிய தேதிகளில் விவசாயிகளுக்கு மக்காச்சோளம் விதை விற்பனை செய்த பணம் உள்ளது என்று கூறி முறையே 1,31,200/- மற்றும் ரூ.1,25,000/-தொகையினை தனித்தனியே இரண்டு கத்தைகளாக மொத்தம் ரூ.2,56,200/-ஐ ஆஜர் செய்தார். மக்காச்சோளம் விதையும் (Free of Cost) அதனுடன் Azospirillum (Free of Cost), Phosphobacteria(Rs.50/-), Organic Fertilizer(Rs.540/-), Nano Urea (Rs.30/-) மற்றும் MN Mixture (Rs.50/-) ஆகிய பொருட்களும் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும். ஆனால் தற்போது மக்காச்சோளம், Azospirillum (Free of Cost), Phosphobacteria(Rs.50/-) மற்றும் MN Mixture ஆகியவை மட்டுமே வரப்பெற்று, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று கூறினார். மக்காச்சோளம் விதை மற்றும் இடுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான Invoice மற்றும் விற்பனை செய்யப்பட்டதற்கான ரசீதுகள் ஏதும் ஆஜர் செய்யாத காரணத்தினாலும், அதற்கான சரியான கணக்கு கூறாத காரணத்தினாலும் ரூ.2,56,200/- மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

திரு.இளையகுமார் என்பவரை விசாரித்தபோது தான் ஏலாக்குறிச்சி Depo Manager-ஆக உள்ளதாகவும், AD திருமதி.எழில்ராணி அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் கீழப்பழூர் வேளாண் விற்பனை மையத்தில் கடந்த 4 நாட்களாக மக்காச்சோளம் விதை மற்றும் இடுபொருட்களை விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருவதாகவும், 17.08.2024 மற்றும் 19.08.2024 ஆகிய தேதிகளில் விற்பனை செய்த தொகையினை AD திருமதி.எழில்ராணி அவர்களிடம் கொடுத்து விட்டதாகவும், இன்று 20.08.2024-ம்தேதி விற்பனை செய்தத் தொகையினை உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக அறையில் வைத்திருப்பதாக கூறி, மேற்படி ஆய்வக அறையிலிருந்து ரூ.1,31,100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரை சோதனை செய்தபோது அவரது மேல்சட்டை பையில் ரூ.1,000/-மும், பேன்டின் வலதுபக்க பாக்கெட்டில் ரூ.7,600/-ம், ஆக கூடுதல் ரூ.8,600/- வைத்திருந்தார். ரூ.1000/- தனது கைச்செலவிற்காக வைத்திருந்த தனது சொந்தப்பணம் என்று கூறியதால், அந்தப்பணம் அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. மீதமுள்ள தொகை ரூ.7,600/-க்கு சரியான கணக்கு கூறாத காரணத்தினால் அந்தத்தொகை ரூ.7,600/- மற்றும் மக்காச்சோளம் விதை விற்பனை செய்யப்பட்டதற்கான ரசீதுகள் ஏதும் ஆஜர் செய்யாத காரணத்தினாலும், அதற்கான சரியான கணக்கு கூறாத காரணத்தினாலும் அந்தத்தொகை ரூ.1,31,100/-, ஆக கூடுதல் தொகை ரூ.1,38,700/- மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் விசாரித்தபோது 5950 கிலோ மக்காச்சோளம் விதை வரப்பெற்றது என்றும், தற்போது இருப்பில் 3310 கிலோ இருப்பில் உள்ளது என்றும் தெரிவித்தார். அவற்றினை பார்த்த வகையில் இருப்பில் 3310 கிலோ சரியாக இருந்தது.

பின்னர், வேளாண் விற்பனை மையத்தில் இருந்த திரு.கோவிந்தசாமி, JA/Depo Manager(பிணையம்) என்பவரை விசாரித்தபோது தனது சட்டைப்பையிலிருந்து ரூ.5110/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க தனது மருத்துவ செலவிற்காக வைத்திருந்த தனது சொந்த பணம் என்று கூறியதால் அந்தப்பணத்தை அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. மேலும் பணம் ஏதும் வைத்திருக்கிறீர்களா என்று விசாரித்தபோது, விதைகள் மற்றும் இடுபொருட்கள் விற்பனை செய்த தொகை வைத்திருப்பதாக கூறி ரூ.37587/-ஐ அவரது டேபிள் டிராயரில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். இன்று 20.08.2024-ம்தேதி விற்பனை செய்ததற்கான ரசீதுகள் மற்றும் ஆவணங்களை கேட்டபோது, ரூ.4727/-க்கு உரிய PA003A21072 முதல் PA003A21077 வரையிலான 6 ரசீதுகளை ஆஜர் செய்தார். அந்தத்தொகை ரூ.4727/- மட்டும் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. மீதத்தொகை ரூ. 32,860/-க்கு உரிய முகாந்திரம் கூறாத காணத்தினால் அந்தப்பணம் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

திருமதி.கலைமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் என்பவரை விசாரித்தபோது தனது கைப்பையில் இருந்து ரூ.180/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி விசாரிக்க தனது கைச்செலவிற்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.180/- அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. மேலும் பணம் ஏதும் வைத்திருக்கிறீர்களா என்று விசாரித்தபோது, இன்று 20.08.2024-ம்தேதி ஏலாக்குறிச்சி

வேளாண் விற்பனை மையத்தில் விதைகள் மற்றும் இடுபொருட்கள் விற்பனை செய்த தொகை வைத்திருப்பதாக கூறி அவர் வைத்திருந்த மற்றொரு பேக்கிலிருந்து ரூ.32670/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். விற்பனை செய்ததற்கான ரசீதுகள் மற்றும் ஆவணங்களை கேட்டபோது, தான் AD அவர்களின் உத்தரவின் பேரில் இன்று ஒருநாள் மட்டும் ஏலாக்குறிச்சி வேளாண் அலுவலகத்திற்கு சென்று விதைபொருட்கள் விற்பனை செய்ததாகவும், ரசீதுகள் ஏதும் போடவில்லை என்றும் கூறினார். சரியான முகாந்திரம் கூறாத காணத்தினால் அந்தப்பணம் ரூ.32,670/- மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும், அலுவலத்தில் இருந்த அலுவலர்களை சோதனை செய்த விரபம் பின்வருமாறு:-

| வ. எண். | பெயர், விபரம் | வைத்திருந்த தொகை | திருப்பி கொடுக்கப்பட்ட தொகை | கைப்பற்றப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.K.எழில்ராணி,<br>த/பெ. கருணாநிதி,<br>வேளாண் அலுவலர், (பொறுப்பு)<br>வேளாண் உதவி இயக்குநர்,<br>திருமானூர் வட்டம்,<br>அரியலூர் மாவட்டம். | 257250 | 1050 | 256200 |
| 2. | திருமதி.ந.கலைமதி,<br>வட்டார தொழில்நுட்ப மேலாளர்,<br>திருமானூர் வட்டம்,<br>அரியலூர் மாவட்டம். | 32850 | 180 | 32670 |
| 3. | திரு.T.இளையகுமார்,<br>த/பெ. தங்கவேல்,<br>JA/Depot Manager | 139700 | 1000 | 138700 |
| 4. | திரு.M.கோவிந்தசாமி,<br>த/பெ.முத்துசாமி,JA/Depot Manager | 42697 | 9837 | 32860 |
| 5. | திருமதி.ம.சிவரஞ்சனி,<br>க/பெ. மதன்மோகன்,AAO | 50 | 50 | 0 |
| 6. | திரு.அருண்ராஜ்,<br>த/பெ. சௌந்தராஜன்,<br>இளநிலை உதவியாளர் | 700 | 700 | 0 |
| 7. | திருமதி.S.கவிதா,<br>க/பெ. கண்ணதாசன்,<br>AHO | 1260 | 1260 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | திரு.மு.ராஜா,<br>த/பெ. முருகானந்தம்,<br>ஓட்டுநர் (தற்காலிகம்) | 170 | 170 | 0 |
| 9. | திரு.சுந்தரமூர்த்தி,<br>த/பெ. செல்வராஜ்,<br>Assistant Technology Manager (Temporary) | 130 | 130 | 0 |
| 10. | திரு.விஜய்,<br>த/பெ. செல்வராஜ்,<br>Bio Control Labour (Temporary) | 1030 | 1030 | 0 |
| 11. | திரு.கொளஞ்சி,<br>த/பெ. முத்துசாமி,<br>Deputy Agri. Officer | 2790 | 2790 | 0 |
| 12. | திரு.தமிழ்குமார்,<br>த/பெ. பரமசிவம்,<br>Bio Control Labour | 7460 | 7460 | 0 |
| **மொத்தம் கைப்பற்றப்பட்ட தொகை** | | | | **460430** |

மேற்படி நபர்களிடம் விசாரணை செய்தபோது, அவர்கள் வைத்திருந்த பணம் தங்களுடைய சொந்த பணம் என்று முகாந்திரத்துடன் கூறியதால் அந்த பணம் உரிய நபர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டு, அதற்கான ஒப்புதல் கடிதம் அவர்களிடமிருந்து பெறப்பட்டது.

இந்த திடீர் சோதனையின் போது கண்டறியப்பட்ட தொகை ரூ.4,60,430/-க்கு மேற்கண்ட அட்டணையில் வரிசை எண்.1 முதல் 4 வரையிலான அலுவலர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால் மேற்படி தொகை ரூ.4,60,430/-ம் சட்ட விரோதமாக ஆதாயம் அடையும் நோக்கத்தில், அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியும், பொதுமக்களை ஏமாற்றியும், சுயலாபத்துடன் முறைகேடாக பெற்று கையாடல் செய்த பணமாகவோ, யாரிடமிருந்தாவது கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணமாகவோ, யாருக்கேனும் லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

**திடீர் சோதனையின் போது கீழ்கண்ட ஆவணங்கள் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.**

| | |
|---|---|
| 1. | பொருள்மாற்று பட்டியல்கள் உள்வருகை, வெளிச்செலவீன பதிவேடு 2016-17 முதல் 2021-22 வரை |
| 2. | கிடங்கு இருப்பு பதிவேடு 2024-25, தொகுதி-35 |

| | |
|---|---|
| 3. | பணப்பதிவேடு 2023-24 மற்றும் 2024-25 |
| 4. | NADP Maize Special Project 2024-25 |
| 5. | பயணப்பதிவேடு 2024 |
| 6. | வருகை பதிவேடு 2024 |
| 7. | உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வருகை பதிவேடு 2024 |
| 8. | PA003A21072 முதல் PA003A21077 வரையிலான 6 ரசீதுகள் |

மேற்படி திடீர் சோதனையின்போது ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் இருந்த அலுவலர்கள் மற்றும் வெளிநபர்களை விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 20.08.2024-ம்தேதி இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம் கீழப்பழூர் to திருச்சி சாலையிலிருந்து மலத்தான் குளம் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் செயல்பட்டு வரும் திருமானூர் மண்டல வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனை மையம்த்தினை 20.08.2024-ம்தேதி 16.45 மணி முதல் 23.30 மணி வரை திடீர் சோதனை செய்தபோது 1)திருமதி.K.எழில்ராணி, த/பெ. கருணாநிதி, வேளாண் அலுவலர், (பொறுப்பு) வேளாண் உதவி இயக்குநர், திருமானூர் வட்டம், அரியலூர் மாவட்டம், 2)திருமதி.ந.கலைமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர், திருமானூர் வட்டம், அரியலூர் மாவட்டம், 3)திரு.T.இளையகுமார், த/பெ. தங்கவேல், JA/Depot Manager(பிணையம்) மற்றும் 4)திரு.M.கோவிந்தசாமி, த/பெ.முத்துசாமி,JA/Depot Manager(பிணையம்) ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.4,60,430/-க்கு மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால் அந்தப்பணம் சட்ட விரோதமாக ஆதாயம் அடையும் நோக்கத்தில், அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியும், பொதுமக்களை ஏமாற்றியும், சுயலாபத்துடன் முறைகேடாக பெற்று கையாடல் செய்த பணமாகவோ, யாரிடமிருந்தாவது கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணமாகவோ, யாருக்கேனும் லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடைப்படையில் கைப்பற்றப்பட்டதால், அந்தப்பணம் லஞ்சப்பணம் (Illegal Gratification) எனக் கருதப்படுவதால் மேற்படி அலுவல்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவுசெய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 20.08.2024-ம்தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள்,

ரொக்கப்பணம் ரூ.4,60,430/- மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள(ஒப்பம்) ப.குணசேகரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். பணிந்து சமர்பிக்கப்படுகிறது: அய்யா, இன்று 21.08.2024-ம்தேதி 12.30 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவினை பெற்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2024 U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018)-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

21.08.24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
அரியலூர்

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நடுவர்/சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

21.08.24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
அரியலூர்